## பா.ஜ.க. அரசின் அடையாளம் 'பாசிசம்', – முந்தைய அ.தி.மு.க. அரசின் அடையாளம் 'அடிமைத்தனம்':

# 'திராவிட மாடல்' அரசின் அடையாளம் - மகளிருக்கான அரசு என்பதே!

### தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெற்ற மகளிர் அணி மாநாட்டில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**தஞ்சாவூர், ஜன. 27–**

**தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் `வெல்லும் தமிழ்ப் பெண்கள்' தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ''ஒன்றிய பா.ஜ.க அரசின் அடையாளம் 'பாசிசம்'. முந்தைய அ.தி.மு.க அரசின் அடையாளம் 'அடிமைத் தனம்'. ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசின் அடையாளம் என்ன? இது முழுக்க முழுக்க மகளிருக்கான அரசு என்பதுதான். இந்த திராவிட மாடல் அரசு அமையக் காரணமாக இருந்ததும் பெண்களாகிய நீங்கள்தான், இன்று இந்த அரசைத் தொடர்ந்து கொண்டாடுவதும் நீங்கள்தான். ஆகவே, நம் அரசின் சாதனைகளை, திட்டங்களை, கொள்கைகளை நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

நம் டெல்டா மாவட்டத்தை, குறிப்பாக இந்த ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தை, 'திராவிட இயக்கத்தின் தொட்டில்' என்று அனைவரும் சொல்வார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தந்த மண் இது. நம் கழகத் தலைவர் அவர்களும், நானும் ஒரு `டெல்டாகாரன்' என்று அடிக்கடி பெருமையாகச் சொல்வோம்.

அப்படிப்பட்ட தமிழ் மண்ணில் இன்று இந்த `வெல்லும் தமிழ் பெண்கள்' மகளிர் மாநாடு மிகச் சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைச் சிறப்பாக ஏற்பாடு செய்த கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுக்கும், அவர்களுடன் சேர்ந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த டெல்டா பகுதியைச் சேர்ந்த அனைத்து அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் அனைத்துச் சகோதரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற இயக்கங்கள் எல்லாம் ஒரு வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறைதான் மாநாடு நடத்துவார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான் சென்ற மாதம் திருவண்ணாமலையில் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு, அதன் பின்பு பல்லடத்தில் மகளிர் அணி மாநாடு, இன்று தஞ்சையில் மகளிர் அணி மாநாடு, மீண்டும் விருதுநகரில் இளைஞர் அணி சந்திப்பு, அதற்குப் பிறகு திருச்சியில் மண்டல மாநாடு என்று மாதம் ஒரு மாநாடு அல்லது சந்திப்பு நடத்தி, நம்முடைய இயக்கத்தின் கொள்கைகளை, அரசின் சாதனைகளை, தலைவரின் சாதனைகளைத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிற ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

நேற்றுதான் நாம் அனைவரும் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கத்தைச் செலுத்தினோம். இந்தித் திணிப்புக்கு எதிராக முதன்முதலாகப் பெண்களைத் திரட்டிப் போராடியது யார் என்று பார்த்தால், இந்த டெல்டா பகுதியைச் சேர்ந்த தர்மாம்பாள் அம்மையார் மற்றும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் அவர்கள்தான். அவர்களைத் தந்த பகுதி இந்தத் தஞ்சைப் பகுதி.

அதுமட்டுமல்ல, தென்னிந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரைத் தந்தது இந்த டெல்டா பகுதிதான். அப்படிப்பட்ட இந்தப் பகுதிதான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் தந்தது.

**பெண்களுக்கு சம உரிமை**

இந்தியாவிலேயே முதல் முறையாகப் பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை கொடுத்தவர் டாக்டர் கலைஞர். இந்தியாவிலேயே முதல் முறையாகக் காவல்துறையில் பெண்களுக்குச் சம வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர். இந்தியாவிலேயே முதல் முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்து வைத்தவர் டாக்டர் கலைஞர். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இன்று கலைஞர் வழியில் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள், பெண்களுக்கு என்று பார்த்துப் பார்த்து நம் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் ஆரம்பித்து வைத்ததுதான் 'விடியல் பயணத் திட்டம்', 'காலை உணவுத் திட்டம்', 'புதுமைப் பெண் திட்டம்', 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்'. இன்று மாதந்தோறும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர்.

**இந்தியாவிற்கே வழிகாட்டி**

அதுமட்டுமல்ல, இங்கு வந்திருக்கக்கூடிய உங்களில் பல பேர் மேயராக, துணை மேயராக, நகர்மன்ற, ஊராட்சி மன்றத் தலைவர்களாக இருக்கிறீர்கள் என்றால், அதற்கு வழிவகுத்தது நம் கழக ஆட்சி மற்றும் நம்முடைய கழகத் தலைவர் அவர்கள். இப்படி மகளிர் முன்னேற்றத்திற்கு ஒட்டுமொத்த இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் நம்முடைய தலைவர் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்.

இப்பொழுது தேர்தல் நெருங்கிவிட்டது; இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் தேர்தல். தேர்தல் எப்பொழுது வந்தாலும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வருவார். இரண்டு நாட்களுக்கு முன்பு வந்திருந்தார். வந்து என்ன பேசினார்? ``நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை" என்று பேசியிருக்கிறார்.

**குற்றவாளிகளுக்கு பா.ஜ.க. ஆதரவுக் குரல்**

மோடி அவர்களே, மைக் என்று நினைத்து நீங்கள் கண்ணாடியைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் போல! உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 2023-லிருந்து பா.ஜ.க ஆட்சியில் இருக்கக்கூடிய மணிப்பூரில் மிகப்பெரிய கலவரம் நடந்தது. அந்தப் பெண்களுக்கு நடந்த கொடுமைகளையெல்லாம் நாடே பார்த்தது. ஏராளமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார்கள். அதுமட்டுமல்ல, பா.ஜ.க ஆட்சி சரியில்லை, சட்டம் ஒழுங்கு கெட்டுப்போய்விட்டது என்று இன்று மணிப்பூரில் ஒரு வருடமாக அமைதி இல்லை.

2002-ஆம் ஆண்டு இதே மோடி அவர்கள் குஜராத்தின் முதலமைச்சராக இருக்கும் பொழுது, ஒரு மிகப்பெரிய கலவரம் நடந்தது. அந்த கலவரத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்கள். ஐந்து மாத கர்ப்பிணி பில்கிஸ் பானுவைச் சங்கிக் கூட்டம் பாலியல் பலாத்காரம் செய்தது. குடும்பத்தையே கொலை செய்தார்கள். அந்த கொடூரமான வழக்கில் குற்றவாளிகள் பக்கம் நின்றது பா.ஜ.க அரசு.

காஷ்மீரில் ஆசிஃபா என்ற சிறுமி, உத்தரப் பிரதேச மாநிலம் ஹத்ராஸ் கிராமத்தைச் சேர்ந்த பட்டியலினச் சிறுமி எனப் பல பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்தார்கள். அந்தக் குற்றவாளிகளுக்கு ஆதரவுக் குரல் கொடுத்த கட்சிதான் பா.ஜ.க.

**வெட்கமாக இல்லையா?**

இந்தியாவிலேயே பெண்கள் அதிகமாக வேலைக்குச் செல்கின்ற மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. ஆனால், இந்தியாவிலேயே பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாக நடக்கின்ற மாநிலங்கள் உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம். இந்த நான்கு மாநிலங்களையும் ஆட்சி செய்து கொண்டிருப்பது பா.ஜ.க அரசு.

பெண்களுக்கு இவ்வளவு கொடுமைகளைச் செய்துவிட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்து பெண்களிடம் வாக்கு கேட்பது வெட்கமாக இல்லையா மோடி? என்று உங்களைப் பார்த்துத் தமிழ்நாட்டுப் பெண்கள் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட பாசிஸ்டுகள் தமிழ்நாட்டிற்குள் வந்தார்கள் என்றால் மகளிருக்கும் பாதுகாப்பு இருக்காது, நம்முடைய மாநிலத்திற்கும் பாதுகாப்பு இருக்காது.

**'நம்பர் ஒன் அடிமை'**

இப்பொழுது கூடப் பெண்களுக்குப் பேருதவியாக இருக்கக்கூடிய 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை எப்படியாவது முடக்குகிறோம் என்று ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. இவ்வளவு நாட்களாக 100 நாள் வேலைத் திட்டத்திற்கு நிதியை ஒதுக்காமல் இழுத்தடித்தார்கள். இன்று அந்த நிதிச் சுமையை நம்முடைய மாநில அரசின் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். இதையும் நம்முடைய முதலமைச்சர்தான் முதல் ஆளாக எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறார். ஆனால் `நம்பர் ஒன் அடிமை' எடப்பாடி பழனிசாமி அதற்கும் ஒன்றிய அரசுக்கு இன்று முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

முரட்டு பக்தர் கேள்விப்பட்டிருப்பீர்கள், முரட்டுத் தொண்டரைப் பார்த்திருப்பீர்கள், ஆனால் இன்று ஒரு 'முரட்டு அடிமையை' நம் கண் முன்னாலேயே நடத்திக் காட்டுகிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். இன்று எப்படியாவது தமிழ்நாட்டிற்குள் நுழைந்து விடலாம் என்று பாசிஸ்டுகள் கனவு காண்கிறார்கள். பழைய அடிமைகள் மட்டுமல்லாமல், இன்று புதுப்புது அடிமைகளும் உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் வரட்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தை, நம்முடைய தமிழ்நாட்டை அவர்களால் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. அதற்கு இங்கே இருக்கக்கூடிய நம்முடைய மகளிர் படை நிச்சயம் ஒரு காவல் அரணாக இருக்கும்.

**அரசுக்கு அடையாளம்**

ஒவ்வொரு அரசுக்கும் ஒரு அடையாளம் இருக்கும். ஒன்றிய பா.ஜ.க அரசின் அடையாளம் `பாசிசம்'. முந்தைய அ.தி.மு.க அரசின் அடையாளம் `அடிமைத்தனம்'. ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசின் அடையாளம் என்ன? இது முழுக்க முழுக்க மகளிருக்கான அரசு என்பதுதான். இந்த திராவிட மாடல் அரசு அமைய காரணமாக இருந்ததும் பெண்களாகிய நீங்கள்தான், இன்று இந்த அரசைத் தொடர்ந்து கொண்டாடுவதும் நீங்கள்தான். ஆகவே, நம் அரசின் சாதனைகளை, திட்டங்களை, கொள்கைகளை நீங்கள் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். நம்முடைய கழகக் கூட்டணி 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும். கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். நம் தலைவர் இரண்டாவது முறையாக மீண்டும் முதலமைச்சர் பொறுப்பில் அமர வேண்டும். அதற்கு இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் அடுத்த 80 நாட்களுக்குத் தேர்தல் பிரச்சாரக் களத்தில் இறங்கி, இன்னும் வேகமாக உழைக்க வேண்டும்.

நம் திராவிட மாடல் இரண்டாம் பாகத்திற்கு (Part 2) மக்கள் தயாராகிவிட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் சொன்னது போல நாம்தான் மீண்டும் வெல்வோம்; நாம்தான் மீண்டும் வருவோம். உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன். நம்முடைய தலைவருடைய ஆட்சி தொடரட்டும், தமிழ்ப் பெண்கள் வெல்லட்டும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் கே.என்.நேரு, மு. பெ.சாமிநாதன், கோவி.செழியன், கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, எஸ்.கே.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் பொன்முடி, தமிழரசி, அமுலு விஜயன், நீலமேகம், அசோக்குமார், அண்ணாதுரை, கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, டி. கே. எஸ்.இளங்கோவன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா, மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை சந்திரசேகர், பழனிவேல், சாக்கோட்டை அன்பழகன், மாநகர மேயர் சண்.ராமநாதன்; துணை மேயர்கள் தமிழழகன், மருத்துவர் அஞ்சுகம் பூபதி; முன்னாள் அமைச்சர்கள் எஸ். எஸ்.பழனிமாணிக்கம், வைத்திலிங்கம், மாநில மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், மாநிலச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், தொண்டர் அணி மாநிலச் செயலாளர் நாமக்கல் ராணி, கார்ல் மார்க்ஸ், மலர் மரகதம், பூதலூர் முருகானந்தம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

---

### சென்னை – நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் – இன்றும், நாளையும் நடைபெறுகிறது!

# 'உலக மகளிர் உச்சி மாநாடு - 2026'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு!

**சென்னை, ஜன.27–**

**முதலமைச்சர் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWE SAFE) சார்பில், தமிழ்நாட்டில் பெண்களுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளித்தலை வலுப்படுத்தும் மற்றும் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில், (இன்றும், நாளையும்) 2026 ஜனவரி 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் உலக மகளிர் உச்சி மாநாடு நடைபெற உள்ளது**

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணி வாய்ப்புகளைப் பெறுவதற்கும், பணிகளில் நீடிப்பதற்கும், மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கும் உதவும் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான தமிழ்நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த 'உலக மகளிர் உச்சி மாநாடு' நடைபெறுகிறது.

இந்த உலக மகளிர் உச்சி மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உலக வங்கியின் மண்டல இயக்குநர் செம் மெட்டே (CEM METE), ஐ.நா. பெண்கள் அமைப்பின் பிரதிநிதியான திருமதி காந்தா சிங், UNDPன் இந்தியப் பிரதிநிதி திருமதி. ஏஞ்சலா லுசிகி, மொரிஷியஸின் தலைமைக் கொறடா திருமதி நவீனா ரம்யாத், தொழில்துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பங்காளர்கள், அடைகாப்பு மையங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட 500க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலக மகளிர் உச்சி மாநாட்டை 27.01.2026 அன்று நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையமத்தில் தொடங்கி வைக்கிறார்.

2026 ஜனவரி 27 மற்றும் 28 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் உலக மகளிர் உச்சி மாநாட்டில் 11 கருப்பொருள்களில் அமர்வுகள் நடைபெற உள்ளன. மேலும், இதில் 70க்கும் மேற்பட்ட ஆளுமைகள் பேச இருக்கின்றார்கள். இது குறித்த விவரங்கள் TNWESAFE இணையதளத்தில் உள்ளன. இந்த விவாதங்கள், TNWE SAFE திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மாநில அளவிலான திட்டத் தயாரிப்புகளை உருவாக்குவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2026 ஜனவரி 28, அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் நிறைவு விழாவில், பெண்கள் திறன் மேம்பாடு மற்றும் முறையான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆதரவளிக்கும் மாநில அளவிலான பிரச்சாரம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

---

### ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட – தமிழ்நாடு

## கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன் வடிவு - மீண்டும் நிறைவேற்றம்!

### சட்டப்பேரவையில் – விவாதத்திற்குப் பதிலளித்து – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விளக்கம்!

**சென்னை, ஜன. 27 –**

**ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட – தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன் வடிவு, சட்டப் பேரவையில் ஜன. 24 அன்று மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

**பேரவையில் இச்சட்ட முன்வடிவு மீதான விவாதத்திற்குப் பதிலளித்த கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இச்சட்ட முன்வடிவு மீண்டும் நிறைவேற்றப்படு வதற்கான காரணத்தை எடுத்துரைத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:

கூட்டுறவுத் துறையின் சார்பில் சில சீர்த்திருத்தங்களை சங்கங்களுடைய பாதுகாப்புக்காக கொண்டுவர வேண்டுமென்று, கொண்டுவரப்பட்ட இந்த அவையின் அனுமதி பெற்ற அந்தச் சட்டத் திருத்தத்தை ஆளுநர் அவர்கள் ஏற்க மறுத்து, திருப்பி அனுப்பியதை மீண்டும் இம்மாமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென்றும், அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டித்தும்,



அதேநேரத்தில் இது முக்கியமான சட்டத் திருத்தம் என்று தங்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கின்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 88 (1) ஆனது ஒரு கூட்டுறவுச் சங்க நிர்வாகச் சபையானது முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கும்பட்சத்தில், அதனைக் கலைத்து, அச்சங்க நிர்வாகத்தில் ஒரு செயல் ஆட்சியரைப் பணியமர்த்தம் செய்யவும் வழிவகை செய்கிறது.

மேலும், அத்தகைய சங்கத்தின் நிர்வாகச் சபையினை இரண்டு மாத கால இடைவெளியில் சில சங்க நிர்வாக சபைகள் அவற்றின் கணக்குப் புத்தகங்களை அழித்துவிடும் சூழ்ச்சியைக் கையாளுகின்றன. எனவே, கலைப்பது தொடர்பான உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் உள்ள இரண்டு மாத கால இடைவெளியில் அத்தகைய சங்க நிர்வாகச் சபையினை இடைநிறுத்தமே செய்து சங்க விவகாரங்களை மேற்பார்வையிட ஓர் இடைக்கால செயல் ஆட்சியரை நியமிப்பது அவசியமாகிறது.

மேலும், அரசின் பங்கு வைப்பு அல்லது கடன் அல்லது நிதியுதவி அல்லது பொறுப்பு நிதி எதுவும் இல்லாத பதிவு பெற்ற சங்கங்களில் அத்தகைய முறைகேடுகள் கண்காணிக்கப்பட்டால், அத்தகைய சங்கங்களின் நிர்வாகச் சபையினைக் கலைப்பது அவசியமாகிறது.

இச்சட்ட முன்வடிவு 10.12.2024 அன்று நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர் சில தெளிவுரைகளைக் கோரி, அதனைத் திருப்பி அனுப்பினார்.

ஆளுநர் கோரிய தெளிவுரைகளுக்கான பதில் அனைத்தும் உரிய முறையில் அனுப்பப்பட்ட நிலையிலும், இச்சட்டமுன்வடிவு 16-.6-.2025 ஆம் நாளன்று திருப்பி அனுப்பப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் திருத்தச் சட்ட முன்வடிவினை மீண்டும் நிறைவேற்றும்படி பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனையடுத்து - பேரவையில் இச்சட்ட முன்வடிவு, குரல் வாக்கெடுப்பின் மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.